**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

**<u>அ.வ.எண். 07/2020</u>**

**நாள்– 05.02.2026**

**வா.சா. 3 – திரு. <u>முருகன் (கிராம நிர்வாக அலுவலர், குமாரபாளையம்)</u>**

**<u>முதல் விசாரணை</u>:**

1) நான் கிராம நிர்வாக அலுவலராக எத்தனை ஆண்டுகளாக பணிபுரிகிறேன் என்றால் 11 ஆண்டுகளாக பணிபுரிகிறேன். நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட அழைப்பாணையின் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். குமாரபாளையம் அக்ரகாரம் கிராமம், சர்வே எண்.539/13,14,15 ஆகியவை 539/13B, 14B, 15B என உட்பிரிவு ஆனது சம்பந்தமாக ஆவணங்கள் சமர்ப்பிக்குமாறு அழைப்பாணை பெறப்பட்டது. குமாரபாளையம் அக்ரகாரம் கிராமம் சர்வே எண். 539/13,14,15 சம்பந்தமான அ–பதிவேடு நான் கொண்டு வந்துள்ளேன். அ–பதிவேட்டின் படி சர்வே எண். 539/13 முத்துக் கவுண்டர் மற்றும் 3 நபர்களின் பேர்களில் உள்ளது. மேற்படி 3 நபர்கள் பெயர்கள் சிட்டாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. ச.எண்.539/14 என்பது ராமாயி என்பவரது பெயரில் உள்ளது. ச.எண்.539/15 என்பது ராமாயி என்பவரது பெயரில் உள்ளது.

2) ச.எண்.539/14 மற்றும் 539/15 அ–பதிவேட்டில் ராமாயி பெயரினைத் தவிர வேறு யார் பெயரும் குறிப்பிடப்படவில்லை. ச.எண்.539/14 மற்றும் 539/15 ராமாயி பெயரில் தனி பட்டாவாக பட்டா எண் 783 ல் உள்ளது. சர்வே எண். 539/13 முத்துக் கவுண்டர் மற்றும் 3 நபர்களின் பெயரில் பட்டா எண்.909ல் உள்ளது. மேற்படி அ–பதிவேடு 1984 ம் ஆண்டு முதலே நில உடைமை மேம்பாட்டிற்காக 1995ம் ஆண்டு வரை பராமரிக்கப்பட்டு வருகிறது. தனபால் என்பவருக்கு ச.எண்.539/13,14,15 ஆகியவற்றினை உட்பிரிவு செய்யும்போது ராமாயிக்கு அறிவிப்பு வழங்காமல் உட்பிரிவு செய்து பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சர்வே எண்.539/13,14,15 உட்பிரிவு செய்யப்பட்டதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேற்படி **ஆவணங்கள் வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) சர்வே எண்கள் 539/13,14,15 என்பது உட்பிரிவு செய்வதற்கு முன்பிருந்த எண்கள் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்கள் 539/13A, 13B,14A,14B , 15A, 15B என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. சர்வே எண்கள்

539/13,14,15ல் யாராவது சொத்தில் ஒரு பங்கினை கிரையம் பெற்றால் மேற்படி சர்வே எண்கள் உட்பிரிவு செய்யப்படும் என்றால் சரிதான். அவ்வாறு உட்பிரிவு செய்ய வேண்டி சொத்தினை கிரையம் பெற்றவர்கள் வட்டாட்சியரிடம் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரிதான். சர்வே எண்கள் 539/13,14,15 ஆகியவற்றினை உட்பிரிவு செய்ய வேண்டி எந்த தேதியில் யார் மனு தாக்கல் செய்தார்கள் என்றால் தனபால் என்பவர் 13.01.2021 தேதியில் மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவுடன் ஆதாரமாக என்ன என்ன ஆவணங்களைத் தாக்கல் செய்துள்ளார் என்றால் 3714/2011 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள கிரைய ஆவணம், புல வரைபடம், பட்டா மாறுதல் உத்தரவு மற்றும் வில்லங்கச் சான்றிதழ் ஆகியவற்றினைத் தாக்கல் செய்துள்ளார்.

2) பட்டா மாறுதல் யாருடைய பெயரில் இருந்து யார் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் தனபாலுக்கு சொத்தினை விற்றவர் கணேசன் மகன் பூபதி என்பவர் பெயரிலிருந்து அழகேசன் மகன் தனபால் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பட்டா மாறுதல் செய்ய வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டால் வட்டாட்சியர் யாருக்கு அந்த மனுவினை அனுப்பி வைப்பார் என்றால் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலருக்கு அனுப்பி வைப்பார். கிராம நிர்வாக அலுவலர் மனு பெறப்பட்ட பின்பு என்ன நடவடிக்கை எடுப்பார் என்றால் நிலத்தினை நேரில் ஆய்வு செய்து, கோப்புகளைப் பரிசீலித்து மண்டல துணை வட்டாட்சியருக்கு பரிந்துரை செய்வோம். மேற்படி பரிந்துரையின் பேரில் பட்டா மாறுதல் செய்யப்படும். தனபால் என்பவருக்கு மேற்படி நடவடிக்கையின் பேரில்தான் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) தனபால் பெயருக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்ட பின்பு அவரது பெயரில் தனிப்பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தனிப்பட்டா எண்.5946 ஆகும். பட்டா மாறுதல் மற்றும் சர்வே எண்களை உட்பிரிவு செய்ய ஒரே மனுவின் பெயரில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தனபால் வாங்கிய சொத்திற்கு தனியாக சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு 1ம் பிரதிவாதி வாங்கிய சொத்திற்கு உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்கள்.539/13B,14B,15B என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு சர்வே எண்கள்.539/13B,14B,15Bல் எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியப்பட்டுள்ளது என்றால் 0.01.68 ஹெக்டேர் ஆகும்.

4) 1ம் பிரதிவாதியின் பேரில் சர்வே எண்கள்.539/13B,14B,15B ஆக உட்பிரிவு செய்யப்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி **பட்டா மாறுதல் உத்தரவுகள் பி.வா.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பட்டா மாறுதல் மற்றும் உட்பிரிவு செய்யப்பட்டது தவறு என்று வாதி ராமாயி வட்டாட்சியரிடம் மனு தாக்கல் செய்துள்ளாரா என்றால் எனக்குத் தெரியாது. சரியாக ஆய்வு செய்து 1ம் பிரதிவாதியின் பேரில் சர்வே எண்கள்.539/13,14,15 ஆகியவற்றிற்கு உட்பிரிவு செய்து பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி ராமாயியின் சொத்தினையும் சேர்த்து 1ம் பிரதிவாதி பட்டா மாறுதல் செய்து கொண்டது தவறு என்றால் சரிதான்.

<u>வாதி தரப்பு மறு விசாரணை</u>

1) சர்வே எண்.539/13 ல் மட்டும் தான் பூபதியின் பெயரில் கூட்டுப் பட்டாவாக உள்ளது என்றாலும் சர்வே எண்.539/14,15 ஆகியவற்றிற்கான பட்டா ராமாயி பெயரில் மட்டும் உள்ளது என்றாலும் சரிதான். 1ம் பிரதிவாதியின் பேரில் பட்டா மாறுதல் செய்யும்போது பூபதியின் பெயரில் உள்ள பட்டாவில் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்பதை பரிசீலனை செய்து பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளதா என்றால் எனக்குத் தெரியாது. ராமாயிக்கு மட்டும் உரிமையுள்ள சர்வே எண்கள்.539/14,15 ஆகியவற்றில் 1ம் பிரதிவாதிக்கு பட்டா மாறுதல் செய்து கொடுத்தது சட்டப்படி சரியானதல்ல என்றால் எனக்குத் தெரியாது. 1ம் பிரதிவாதி பட்டா மாறுதல் செய்ய வேண்டி கொடுத்த மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2) ராமாயி கடந்த 19.11.2019 தேதியில் மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர், வட்டாட்சியர், கிராம நிர்வாக அலுவலர், குமாரபாளையம் ஆகியோருக்கு வா.சா.ஆ.7ன் படி சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண்.539/14,15 பொறுத்து வாதி 1ம் பிரதிவாதிக்கு கிரையப் பத்திரம் எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் வாதிக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.539/14,15 ஆகியவற்றினை 1ம் பிரதிவாதிக்கு உட்பிரிவு செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த கிரையப் பத்திரமானது சர்வே எண்.645/2க்குரியது என்றால் அது பழைய சர்வே எண்ணாகும். பூபதியின் பழைய பட்டாவின் விஸ்தீரணத்தினை விட தற்போது

1ம் பிரதிவாதியின் பேரில் அதிகமான விஸ்தீரணத்திற்கு பட்டா வழங்கியுள்ளோம் என்றால் எனக்குத் தெரியாது.